Name of the Newspaper: ..........Dinamalar.......................... Date: 28-5-18

சென்னை

தினமலர்
சென்னை | திங்கள் | 28.5.2018

# மெட்ரோ ரயிலில் 3.20 லட்சம் பேர் பயணம்





■ சென்னை, நேரு பூங்கா முதல், சென்ட்ரல் வரை மெட்ரோ ரயில் சேவை, நேற்று முன்தினம் துவங்கப்பட்டது. இதையடுத்து, சென்ட்ரல் – கோயம்பேடு வழியாக, விமான நிலையத்திற்கு இலவசமாக பயணம் செய்ய அலைமோதிய கூட்டம். ■ ரயிலில் பயணம் செய்த பொதுமக்கள். இடம்: சென்ட்ரல்.

**சென்னை, மே 28–** மெட்ரோ ரயிலில், மூன்று நாட்களில், 3.20 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

விமான நிலையத்தில் இருந்து, நேரு பூங்கா வழியாக சென்ட்ரலுக்கும்; சின்னமலை வழியாக, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்.,க்கும், மெட்ரோ ரயில் போக்குவரத்து, 25ம் தேதி துவங்கியது.

மெட்ரோ ரயில் போக்குவரத்து குறித்தும், நிலையங்களின் பிரமாண்டம் குறித்தும், பாதுகாப்பு நடிவடிக்கை மற்றும் வசதிகள் குறித்தும், பொது மக்கள் தெரிந்து கொள்ளவதற்காக, 25ம் தேதியில் இருந்து, நேற்று வரையிலான, மூன்று நாட்களுக்கு, இலவச பயணம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையொட்டி, விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், விமான நிலையத்தில் இருந்து, கோயம்பேடு வழியாக, சென்ட்ரல் வரையும்; ரயிலில், பயணியர் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டு இருந்தனர்.

பயணியருக்கு, பயண வழிகாட்டுதல் மற்றும் பாதுகாப்பு பணிக்கு அதிகமானோர் நியமிக்கப்பட்டு இருந்தனர்.

இந்நிலையால், மெட்ரோ ரயில்களில், 25ம் தேதி, 50 ஆயிரம் பேரும்; 26ல், 1.20 லட்சம் பேரும் பயணம் செய்தனர்.

நேற்று காலை முதல், பயணியர் கூட்டம், மெட்ரோ ரயிலில் அதிகமாக இருந்தது. 10 நிமிட இடைவெளியில், ரயில்கள் இயக்கப்பட்டன. இதனால் நேற்று, 1.50 லட்சம் பேர், ரயிலில் பயணம் செய்தனர்.

மூன்று நாட்களிலும், 3.20 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். இன்று, மெட்ரோ ரயிலில் கட்டணம் செலுத்தி, பயணம் செய்யலாம்.